**எகடொக்ஸ் - 50**

அதிகசக்தி வாய்ந்த சர்வகிருமி நாசினி

" எகடொக்ஸ் - 50 "ஐ
உங்கள் கமத்தில் பாவித்து
அதிக இலாபத்தைப் பெறுங்கள்.

விலையோ மிகவும் மலிவு
சக்தியோ மிகவும் அதிகம்

விநியோகஸ்தர்கள்:

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெட்**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 234



★ ★

Registered as a News paper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 9 [23-1-68] இதழ் 344

யாழ்ப்பாணம் பிலவங்க தை 9 வவ்வால் 12 செவ்வாய்க்கிழமை



**V.K. இராசரத்தினம்**

[ றேடியோ திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் ]

எமது ஸ்தாபனத்தை

**95, ஸ்ரான்லி றேட்,**

[ K. K. சங்கரப்பிள்ளை கட்டிடம் ]

**யாழ்ப்பாணம்**

என்ற விலாசத்திற்கு
மாற்றி இருக்கிறோம் என்பதை
அறியத்தருகிறோம்.


# 'அடையாள அட்டைமுறை தமிழ்மக்களையேபாதிக்கும்



## இந்த மசோதாவை எதிர்த்தேவாக்களிப்பேன்'

### தீவுப்பகுதி எம். பி. அறிவிப்பு

— நிருபர் திரு. —

யாழ்ப்பாணம், செவ்வாய்

**அடையாள அட்டைமுறை இலங்கை முழுவதும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டால் அதனால் தமிழ் மக்களே அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். இவ்வாறு தீவுப்பகுதிபாராளுமன்ற உறுப்பினரான திரு. வி. நவரத்தினம் தெரிவித்தார்.**

அடையாள அட்டை மசோதா இம்மாதம் 26-ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

"அடையாள அட்டை மசோதாபற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை. முன்னர் இதுபற்றிய யோசனைகள் தெரிவிக்கப்பட்டபோது இதுதமிழ்பேசும்மக்களுக்கே ஆபத்தாகும் என கருத்துத் தெரிவித்திருந்தேன் இப்பொழுது மசோதாவின் விபரம் தெரியவில்லை எனவே இதுபற்றி அபிப்பிராயம் எதுவும் சொல்லமுடியாதிருக்கிறது" என்று திரு.வி. நவரத்தினம் தெரிவித்தார்.

தமிழ் மக்களை சந்தேகப் பிரஜைகளாக்கி அவர்களை வெகுவாகப் பாதிக்கக்கூடிய முறையில் இம்மசோதா கொண்டுவரப்பட்டால்தாம் அதை எதிர்த்து வாக்களிக்கப்போவதாகவும் அவர் சொன்னார்.

## "மாவட்டசபை மசோதாவை காங்கிரஸ்எதிர்க்கவேண்டும்"

### காங்கிரஸ் வாலிப முன்னணி தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்.

பிரதிநிதிகள் சபையில் மாவட்டசபை மசோதா வரும்பொழுது தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் எம்.பி.க்கள் எதிர்த்துப் பேசுவது மட்டுமல்லாமல் எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்றும் தமிழ்க் காங்கிரஸ் தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை இந்த எதிர்ப்பின்மூலம் காப்பாற்ற வேண்டுமென்றும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் யாழ்ப்பாண வாலிப முன்னணிக் கிளை ஏகமனதாகத் தீர்மானித்தது.

"தமிழரசுக்கட்சியின் பரிசிலனையின் பின்னர் பிரதிநிதிகள்சபையில்சமர்ப்பிக்கவிருக்கும் மாவட்டசபை மசோதாவை எதிர்ப்பது மட்டுமல்லாமல் எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்றும், அல்லாவிட்டால் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் யாழ்ப்பாண வாலிப முன்னணிக் கிளை கட்சியில் இருந்து விலகிவிடுவதைப் பற்றி ஆலோசிக்கும். தென் இலங்கையில் வாழும் தமிழ் மக்களை நசுக்குவதற்காக உருவாக்கப்பட்ட மாவட்டசபை மசோதாவை தமிழ்க்காங்கிரஸ் எந்த விதத்திலும் ஆதரிக்கக் கூடாது'.

நேற்று யாழ்ப்பாணம் தமிழ்காங்கிரஸ்கட்சிக் காரியாலயத்தில் கட்சிப்பிரமுகர்களுக்கிடையே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் யாழ்ப்பாண வாலிப முன்

[8ம்- பக்கம் பார்க்க]

**பிந்தியசெய்தி**

## டிட்டோ இந்தியா வந்தார்

புதுடில்லி, ஜன.22

யூகோஸ்லாவிய ஜனாதிபதி டிட்டோ இன்று மாலை இங்கு வந்து சேர்ந்தார். நாளைவருவதாக எதிர்பார்க்கப்பட்டஇவர் இன்று மாலை பாலம் விமான நிலையத்தை வந்தடைந்தார், இவரைத் தலைவர்களும் மக்களும் அன்புடன் வரவேற்றனர். திருமதி டிட்டோவும் இவருடன் வந்தார்.

[விபரம்3-ம்பக்கம்]

## கிராமங்களுக்கு மின்சாரம்

கொழும்பு, திங்கள்

கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு மின்சாரப்பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். 175 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்குஅமைச்சு அங்கீகரித்துள்ளது.

மேலும் 127 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு அமைச்சின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

## வாலிபமுன்னணி பிரிந்து செல்லும்

### மாவட்டசபை மசோதா கொண்டு வரப்படாவிட்டால்

யாழ்ப்பாணம், செவ்

இம்மாதம் 26-ம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தில் மாவட்டசபை மசோதா சமர்ப்பிக்கப்படாவிட்டால் உடனடியாக தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்து விலகுவதுடன் தேசிய அரசாங்கத்துடன் உள்ள சகல தொடர்புகளையும் துண்டிக்குமாறு கோரும் தீர்மானம் இம்மாதம் 28-ம் திகதி நடைபெறவிருக்கும் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவிருக்கின்றது.

இக்கூட்டம்யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க சமூகங் கொடுக்குமாறு வாலிபமுன்னணித் தலைவர் திரு. செ. இராசதுரை எம். பி. அழைக்கப்பட்டுள்ளார்.

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் அரசாங்கத்திலிருந்து வெளியேறும் தீர்மானத்தை தமிழரசுக்கட்சித் தலைமைப்பீடம் ஏற்க மறுத்தால் வாலிப முன்னணி கட்சியிலிருந்து விலகி

((8-ம் பக்கம்பார்க்க)

**3—வதுகிரிக்கட்டெஸ்ட்**

## இந்திய கோஷ்டி நிலைமையை சமாளிக்கிறது

பிரிஸ்பேன், ஜன 22

ஆஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்குமிடையே நடைபெறும் 3-வது கிரிக்கெட் டெஸ்டில் 3-வது நாளான இன்று இந்தியா தனது எல்லா விக்கெட்டுக்களையும் இழந்து 279 ரன்களை எடுத்திருந்தது. ஆஸ்ரேலியா தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 379 ஓட்டங்களை எடுத்திருந்தது தெரிந்ததே.

இன்று இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை ஆஸ்திரேலியா 3 விக்கெட் நஷ்டத்துக்கு 162 ரன்களை எடுத்திருந்தது.

## சிறந்த கலைஞர்களுக்கு விருது

சென்னை, ஜன, 22

தமிழ்நாட்டு சிறந்த கலைஞர்களுக்குதமிழ்நாடுநாடக சங்கீதசங்கம் விருதுகள் வழங்கிகௌரவிப்பதெனமுடிவு செய்துள்ளது. 1967-68-ம் ஆண்டுக்கான விருதுகளை வழங்குவதற்கு ஒவ்வொரு துறையிலும் சிறந்த 24 கலைஞர்களை அது தேர்ந்தெடுத்துள்ளதாக இன்று அறிவித்தது.

விருதுகளைப் பெறும் சில கலைஞர்கள்விபரம் வருமாறு:

சுத்தானந்தபாரதியார்— சிருஷ்டி, எஸ். பாலச்சந்தர் வீணை. திருமுருக கிருபானந்தவாரியார் கலாட்சேபம்; எம். என். நம்பியார் நாடகநடிகர், தி ஜானகிராமன் — நாடக ஆசிரியர், திருமதி விஜயகுமாரி ராஜேந்திரன்— திரைப்பட நடிகை எஸ். எஸ் ராஜேந்திரன் —திரைப்பட நடிகர் கொத்தமங்கலம் சுப்பு — திரைப்படக் கதாசிரியர், கம்பதாசன் — திரைப்பட பாடலாசிரியர்,

### நிலைமையை பரிசீலித்தபின்

## கட்சியிலிருந்து விலக திரு. நவரத்தினம் முடிவு

### மீண்டும் திருமலைத் துறைமுகப் பிரச்னை

யாழ்ப்பாணம், செவ்

ஜனவரி மாத முடிவில் தமிழரசுக் கட்சியின் நிலையைப்பரிசீலனை செய்த பின் னர் தமிழரசுக் கட்சியிலிருந்து தீவுப்பகுதி எம்.பி.திரு. வி நவரத்தினம் விலகி சுயேச்சை எம். பி.யாக தொடர்ந்து கடமையாற்றுவார் என்று தெரிகிறது.

திருமலைத் துறைமுகத்தை ... உத்தரவை ரத்து செய்து திருமலைத்துறைமுகத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருமாறு கோரும் பிரேரணை ஒன்றையும்பார்லிமெண்டில் திருநவரத்தினம் சமர்ப்பிப்பார் எனத் தெரிகிறது [கா.நி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

காஷியர்:

யாழ்ப்பாணத்திலுள்ள பிடவை வியாபார ஸ்தாபனத்திற்கு ஆங்கில அறிவுடைய, ரூபா 2000/ பிணைப் பணம் கட்டக்கூடிய, நம்பிக்கையான காஷியர் உடனே தேவை. குடும்ப விபரத்துடனும், பொறுப்புடன் சிபார்சு செய்யத் தகுதியுடைய இருவரின் நற்சாட்சிப் பத்திரங்களுடனும் விண்ணப்பிக்கவும். மாதச் சம்பளம் ரூபா 125/ மட்டும். இல. 1808 C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 1808

## கல்வி

வகுப்புகள்:

ஜீ. சி. ஈ. கலை/விஞ்ஞானம்/ வர்த்தகம் பயிற்றப்பட்ட பட்டதாரிகள் மூலம் வகுப்புகள் நடாத்தப்படும். எங்கள் மாணவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் சித்தியடைகின்றனர். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்/179 பிரதான வீதி, கல்முனை. 2097

வகுப்புக்கள்,

ஜீ. சி. ஈ. (உயர்தரம்/சாதாரணம்) கலை விஞ்ஞானம், மாணவ ஆசிரிய பயிற்சி. வர்த்தகம், சிங்களம், ஆகிய வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. யாழ்ப்பாண டியுட்டோறியல் கல்லூரி, [Jaffna Tutorial College] 60, அரசடி வீதி, (தட்டாதெருச் சந்தி) யாழ்ப்பாணம். 2088

## விற்பனைக்கு

EY இருநூறு இலக்கத் தொடர் A/40 டெவன் CN ஒன்பதினாயிரம் இலக்கத்தொடர் கில்மன் மிங்ஸ் 55 ஸ்ரீ இரண்டாயிரம் இலக்கத்தொடர் பெர்குசன் ரில்லர்; டிறக்ரர் பெட்டி; 2 சட்டிக்கலப்பை, மரம் அரியும் வாள் குறுக்களவு 36". இவை திருப்திகரமான நிலையில் உடன் விற்பனைக்குண்டு. ஜனு செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 1809

## வாடகைக்கு

வீடு:

வியாபாரி மூலை- பருத்தித்துறை மெயின் வீதியில் கடற்கரை. காட்லி, மெதடிஸ்த கல்லூரிகள், கோடுகளுக்கு அண்மையில் லைற், குழாய் நீர், வசதிகளடங்கிய 4 அறை வீடுவாடகைக்குண்டு. விபரங்களுக்கு 146 A கோவில் வீதி, நல்லூர். 1802

நெத்தலி ஆற்று

## பால வேலையில் தாமதம்

தருமபுரம், திங்கள்

தருமபுரம் நெத்தலி ஆற்றுப் பாலம் அமைப்பதற்காகச் சமீபத்தில் போக்குவரத்து மராமத்துப் பகுதி மந்திரியினால் அடிக்கல் நாட்டி மாதங்கள் ஆறு கடந்துவிட்ட போதிலும், இன்னமும் பாலம் அமைத்தற்கு வேண்டிய உபகரணங்கள் வந்து சேராமையால் இதுசம்பந்தமாக கடமையாற்ற வந்துள்ள உத்தியோகத்தர்களும் சிப்பந்திகளும் போதிய வேலையின்றிக் காலத்தை வீணே கழிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாம்.

# "தொழிற்சங்க வளர்ச்சிக்கு நேர்மை அவசியம்"

உடுவில், திங்கள்

'எந்த ஒரு தொழிற்சங்க வளர்ச்சிக்கும் நிர்வாகிகள் திறமையும், சேவை மனப்பான்மையும், நேர்மையுமுடையவராய் இருத்தல் அவசியம். இன்று யாழ்ப்பாணத்தில் சுருட்டுத் தொழில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் யாழ்ப்பாண பொருளாதாரமே பாதிக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்கம் வளர்ச்சியுற வேண்டுமானால் முதலாளி- தொழிலாளியிடையிலான உறவுமுறை சகோதர மனப்பான்மையுடன் விளங்க வேண்டும். சுரண்டிவாழும் முறை ஒழிய வேண்டும். முதலாளி தொழிலாளியை சுரண்ட தொலாளி முதலாளியின் முழுவுக்கும் தொழிலுக்கும் பங்கமேற்படுத்தத் தொழில் வீழ்ச்சியடைவது உறுதி. தொழிலாளருக்குச் சேமலாப நிதி அவசியம். தொழில் ஸ்திரமடைந்தால் தான் இந்நிதியை திறமையாக இயங்கவைக்கலாம். ஒரு தொழிற் சங்கவாதி- தலைவன்-அத்தொழிலின் காவலாளியாகவும் இருக்க வேண்டும். தொழிற்சங்கத்திலுள்ள ஒரு சில தலைவர்கள் தொழிலாளியைச் சுரண்டி வாழமுற்படுகிறார்கள். தொழிலாளர் ஒற்றுமையுடன் இதனை எதிர்த்துப் போராடி தொழில் வளர்ச்சியடையப் பாடுபடவேண்டும்

அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கக்கூட்டம் இணுவில் கந்தசாமிகோவில் வீதியில் நடைபெற்றபோது உரையாற்றிய உடுவில் கிராம சபைத் தலைவர் திரு ச. முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினார். திரு ஆ. கந்தையா தலைமைவகித்தார்

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள்

வழக்கம்பரை வாசிகசாலை ஆரம்பக்கூட்டம், சுழிபுரம் கிராமசபை மண்டபத்தில் திரு. ச. பரமானந்தன் தலைமையில் நடைபெற்றது. வாசிகசாலை இயங்கவேண்டியதன் அவசியத்தையும். அதன் அமைப்புமுறைகளைப் பற்றியும் திருவாளர்கள் க. வாமதேவன், ச. பரமானந்தன், க. இந்திரராசா ஆகியோர் பேசினர். பின்னர் நடைபெற்ற புதுவருட நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. வாமதேவன், உப-தலைவர்: திரு. ப. இராசகுரு, இணைச்செயலாளர்கள்: திருவாளர்கள் க. ஜெகதீஸ்சந்திரன், பொ. சண்முகராசா, தனாதிகாரி: திரு. ச. பரமானந்தன், உப-தனாதிகாரி: திரு. வே. நடராசா. எட்டுப் பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## 'முத்துக்குளிப்பதில் புதிய முறை'

யாழ்ப்பாணம், செவ்.

'வடமாகாணத்தில் முத்துக்குளிப்பவர்கள் கஷ்டத்தைப் போக்குவதற்குப் புதிய முறை' என்ற தலைப்பில் 11-1-68-ல் 1-ம் பக்கத்தில் வெளியான செய்தியில் புதிய கருவியை உபயோகிப்பதன் மூலம் முத்துக்குளிக்கும் ஒரு தொழிலாளி ஒரு நாளில் சுமார் 1000 ரூபாய் வரை உழைக்கலாமென தெரிவித்தது நாச்சிக்குடாவைச்சேர்ந்த ஜனாப் கா. அ. அபூபக்கரான தாம் தான் என அவர் தெரிவித்துக் கொள்கிறார்.

## லைசென்ஸில்லாது நகைஅடைவு

### ரூ. 75 அபராதம்

குரும்பசிட்டி, திங்கள்

லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் இன்றி நகைகள் அடகு பிடித்தவரான அச்சுவேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசையா என்பவருக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் ரூபா 75 அபராதம் விதித்தார். காங்கேசன்துறைப் பொலிசாரால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்த எதிரி தமது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

# விவசாயிகள் கவலை

ஊர்காவற்றுறை, திங்.

'அங்கத்தவர்களிடமிருந்துவரவிருக்கும் விவசாயக் கடனையும், வட்டியையும் தவணை தப்பிய பங்குத் தடவைப் பணத்தையும் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் விற்கும் விவசாய உற்பத்தி பொருட்களுக்குரிய பணத்திலிருந்து கட்டாயம் அறவிடப்படவேண்டும்' என கூட்டுறவுப் பரிசோதகர் திரு சவுந்தரநாயகம் சரவணை வேலணை பேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மனேச்சருக்கு அறிவித்துள்ளார்.

கடந்த வெள்ளப் பெருக்கினால் தீவுப்பகுதியில் குறிப்பாக வேலணை, சரவணை, நாரந்தனை, புளியங்கூடல் பகுதிகளில் வெங்காயச் செய்கை பெரும்பாலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கமக்காரர்கள் பெரிதும் கவலைஅடைந்திருக்கும் வேளையில் விவசாயக் கடனைக்கொடுப்பதில் கமக்காரர்களுக்குக் கஷ்டமான நிலை ஏற்படலாம் என அறியப்படுகிறது.

## 'இலங்கையர்கோன்' நாடககோஷ்டி

### தென்னிந்தியா செல்லும்

குரும்பசிட்டி, திங்கள்

ஏழாலை 'இலங்கையர் கோன்' நாடகமன்றத்தினர் தென்னிந்தியாவில் தமது நாடகங்களை நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்து வருகின்றனர். யாழ்ப்பாணத்து மண் வாசனையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாடகம் ஒன்றினை சித்திரை மாதமளவில் தென்னிந்தியாவில் அரங்கேற்றவிருக்கின்றனர். சுமார் எட்டுப் பேரைக் கொண்டதாக இந் நாடகக்கோஷ்டி அமைந்துள்ளது.


# விளம்பரம்

வலி-கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் கீழ் காணப்படும் அளவுகளையுடைய புதிய ரயர்கள் விற்பனைக்கு இருக்கின்றன. இந்த ரயர்கள் தேவையானோர் தங்கள் மோட்டார் வாகனத்தின் மோட்டார் வாகனப் பதிவுப் புத்தகத்தையும், வாகனத்தின் லைசென்சையும் சமாசத்தில் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

| ரயரின் விலை | | ரியூப்பின் விலை |
|---|---|---|
| 750X20 | ரூபா 595-00 | ரூபா 40-00 |
| 520X14 | ரூபா 112-00 | ரூபா 22-00 |
| 560X15 | ரூபா 119-00 | ரூபா 22-00 |
| 600X16 | ரூபா 202-50 | ரூபா 22-00 |

நீர்வேலி,
19-1-68. 156

க. வி. கனகசபாபதி,
தலைவர்.

ராதா மணிமார்க்
# சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்து தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-
# எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். றோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
5வது வாரம்!
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

நியூ காலிங்கன்
(இணுவில்)
2-வது வாரம்
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 3-30
ஜெய்சங்கர்-ஜமுனா நடித்த
குழந்தையும் தெய்வமும்


MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
Charlie Drake
in
SANDS OF THE DESERT
(Technicolor)

REGAL JAFFNA
Daily at
4-30, 7-00 & 9-45 p.m.
Yul Brynner
in
Taras Bulba

# இப்பொழுது நடைபெறுகிறது

கிங்ஸ்லி (கொட்டாஞ்சேனை)
வினாலா (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
லிடோ (பொறளை)
மொடேர்ன் (பதுளை)

எம்.ஜி.ஆர். சரோஜாதேவி



மற்றும் பலர் நடித்த
சரவணா பிலிம்ஸ்
படகோட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிட்டோ, கொஸிஜின் இந்தியா வருகிருர்கள்

## வியட்னும் பிரச்னை சம்பந்தமாக இந்திராகாந்தியுடன் பேச்சுவார்த்தை



புதுடில்லி, ஜன.22
சோவியத்பிரதமர் கொஸிஜினும், யூகோஸ்லாவிய ஜனதிபதி டிட்டோவும் இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தியுடன் வியட்னும் சமாதான தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்கள்.

நாளை ஜனதிபதி டிட்டோ கம்போடியாவிலிருந்து பாரதம் வந்து சேர்வார்.

வியட்னும் யுத்தம் கம்போடியாவரை பரவுவது சம்பந்தமாக ஸ்ரீமதி இந்திராகாந்தியுடன், டிட்டோ நடாத்தவிருக்கும் பேச்சுவார்த்தையில் விளக்கமாக ஆராய்வார்.

சோவியத்பிரதமர் கொஸிஜின் இம்மாதம் 25-ந்திகதி பிரிட்டிஷ் பிரதமர் வில்சனுடன் தமது பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு புதுடில்லி வந்து சேருவர்.

1954-ல் செய்து கொள்ளப்பட்ட ஜெனிவா ஒப்பந்தம் பற்றி பிரிட்டனில் திரு. வில்ஸனுடன் திரு. கொஸிஜின் பேச்சுவார்த்தை நடத்துகிருர்.

டிட்டோ, கொஸிஜின் இந்திராகாந்தி சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது வியட்னும் பிரச்னையுடன் பல்வேறு உலகப் பிரச்னைகளும் ஆராயப் படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூவரிடையேயான பேச்சுவார்த்தைகள் 27-ந் திகதி முடிவடையும். டிட்டோ 29-ந் திகதி தாயகம் திரும்புவார்.



### கல்கத்தாவில் பஸ் புரண்டது
#### நால்வர் பலி

கல்கத்தா, ஜன.22
கல்கத்தாவிலிருந்து நேற்று வந்துகொண்டிருந்த பஸ் பயங்கரமாக புரண்டதில் ஸ்தலத்திலேயே 4 பேர் மாண்டனர். 21பேர் காயங்களுக்குள்ளாஞர்கள்.7 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### பெண் இருதயம் பொருத்தப்பட்டவர் காலமாஞர்

கலிபோர்னியா.ஜன.22
கலிபோர்னியாவில் பெண்ணின் இருதயம் பொருத்தப்பட்ட 54 வயதுடைய மனிதர் நேற்றுக் காலமாஞர். இவருக்கு இருவாரங்களின் முன் மாற்று இருதயம் பொருத்தப்பட்டது.

### சாக்குக்குள் துவக்கு

அளவெட்டி, திங்.
தெல்லிப்பழை வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பலாலி வாசியான ரி தியாகராசாவை காங்கேசன்துறைப் பொலிசார் ரோந்து சுற்றி வருகையில் சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்திய போது அவர் நில்லாததையடுத்து துரத்திப் பிடித்து சோதனையிட்டபோது சாக்கில் கட்டப்பட்டு கொண்டு சென்ற துவக்கு ஒன்றை கண்டு பிடித்தனர்.

இது சம்பந்தமாக விசாரணை செய்த பொலிசார் இத்துவக்கு லைசன் இல்லாது சட்ட விரோதமாக வைத்திருந்ததாக அவரை கைது செய்துள்ளனர்.

### சங்கப் பிரதிநிதி தெரிவு

ஊர்காவற்றுறை, திங்கள்
வட இலங்கை விவசாய விளைபொருள் உற்பத்திச் சங்கத்தின் சரவணை—வேலணை மேற்கு பலநோக்கக்கூட்டுறவுச் சங்கப்பிரதிநிதியாக வழக்கறிஞர் திரு. என். ரி. சிவஞானம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



## ஜனதிபதி ஜோன்ஸன் மீது ஹனேய் குறைபாடு



ஹனேய், ஜன. 22
அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சன் மீது ஹனேய் குறை கூறியுள்ளது. வியட்னும் சமாதானத் தீர்வுக்கு அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் மீண்டும் வலியுறுத்தியிருந்த அமெரிக்க பிரேரணைகளை வட வியட்னும் நிராகரித்து. இந்த சமாதான தீர்வு யோசனைகள் ஏற்றுக் கொள்ள முடியாதவைகளாக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

குண்டுத் தாக்குதலை நிறுத்திஞல், பொதுவுடமை நாடுகள் அதனை ஒரு சந்தர்ப்பமாக உபயோகிக்கக் கூடாதென அமெரிக்காவின் பிரேரணையொன்றைச் சுட்டிக் காட்டி, ஹனேய் ஜோன்சன் மீது குறை தெரிவித்துள்ளது.

வட வியட்னும் மீது நிபந்தனையற்ற குண்டு வீச்சை அமெரிக்கா நிறுத்திஞல் சோவியத் யூனியன் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக மீண்டும் தெரிவித்துள்ளது.

### பொலிஸில் 30 சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், செவ்.
பூட்டப்படாது ஆஸ்பத்திரி வளவுக்குள் நேற்று நிறுத்தப்பட்டிருந்த சுமார் 30 சைக்கில்களை பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர், அதிகரித்து வரும் சைக்கிள் களவுகளை தடுக்குமுகமாகவே இந்த முன்னேற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
[கா. நி]

## இரவல் இருதயக்காரர் நிலை 100 வீதம் திருப்தி

★ நடக்கிருர் ★ சாப்பிடுகிருர்
★ எல்லாமேசரிவர இயங்குகிறது

கேப்டவுன், ஜன. 22
20 தினங்களுக்கு முன்னர் இரவல் இருதயம் பொருத்தப்பட்ட டாக்டர் பிலிப் பிளைபேர்க் நூறு சதவீதம் திருப்திகரமாக இருப்பதாக அறிக்கை ஒன்று கூறுகிறது.

படுக்கையிலிருந்து எழுந்து சிறிது தூரத்துக்கு இவரால் நடக்க முடிகிறதாம். அவர் இருதயத்தை சுற்றி ஏற்பட்ட திரவகம் இப்போது தாஞகவே மறைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. சில நாட்களாக அவருக்கு இருந்து வந்த தொண்டை வலி இப்போது அவருக்கில்லை.

டாக்டர் பிளைபேர்க்கால் இப்போது நாற்காலியில் சாதாரணமாக இருந்து சாப்பிட முடிகிறது என்று டாக்டர் ஸர்ஞர்ட் கூறிஞர் அவருடைய நாடி, உடல், வெப்பம் இரத்த அழுத்தம் ஆகிய முக்கிய அம்சங்கள் இப்போது திருப்திகரமாக இயங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்க மாலுமிகள் தளம் தாக்கப்பட்டது

ஹனேய், ஜன 22
வியட்னுமில் ராணுவ விலக்கல் பகுதிக்குத்தெற்கே கேய்ஷாஞ என்ற அமெரிக்க மாலுமிகள் தளம் வடவியட்னுமியரால் படுமோசமாகத் தாக்கப்பட்டது. இந்தத் தாக்குதலிஞல் அமெரிக்க மாலுமி துருப்புக்கள் 20பேர் மாண்டனர்.

வெடிமருந்துக் கிடங்குகள் இந்தத் தாக்குதலின்போது நாசமாக்கப்பட்டது. அமெரிக்கரின் 3 ஹெலிகாப்டர்கள் நாசமாகியது. 12 குடிசைகளும் தீக்கிரையாகின.

சூயஸில் சிக்கிய கப்பல்களை

## விடுவிக்கும் பொறுப்பை அரபு குடியரசு ஏற்றது

கெய்ரோ,ஜன.22
சூயஸ்கால்வாயில் அகப்பட்டுள்ள 15 கப்பல்களை விடுவிக்கும் பொறுப்பை ஐக்கிய அரபுக்குடியரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இவற்றை விடுவிக்கும் வேலைகள் இவ்வாரமுடிவுக்குள் ஆரம்பமாகும்.

கடந்த வருடம் ஜூன் மாதம் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற போரைத் தொடர்ந்து 9 நாடுகளைச் சேர்ந்த 15 கப்பல்கள் சூயஸ் கால்வாயில் சிக்கிக்கொண்டுள்ளன.

### நாகசுர கலைஞர்கள் தமிழகம் சென்றனர்

அளவெட்டி, திங்
இம்மாத இறுதியில் திருப்பதியில் நடைபெற இருக்கும் தியாகராஜர் உற்சவத்தில் நாகசுர தவில்க் கச்சேரி நிகழ்த்துவதற்கு யாழ்ப்பாணம் நாகசுரவித்துவான் பி. எஸ். ஆறுமுகப் பிள்ளையும், அளவெட்டி நாகசுர வித்துவான் என்.பி. பாலகிருஷ்ணனும் இணுவில் இளந் தவில் வித்துவான் ஆர். புண்ணிய மூர்த்தியும் நேற்று முன்தினம் தமிழகம் சென்றுள்ளனர்.

'மக்களின்

## மனப்பான்மையில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது'
### உலகப் பொருட்காட்சி திறப்பு விழாவில் உபஜனதிபதி கவலை

சென்னை, ஜன. 22
பொருளாதார மந்தத்தைவிட மக்களின் மனப்பான்மையிலேயே மந்தநிலை இப்போது பாரதத்தில் ஏற்பட்டுள்ளது' என்று பாரத உபஜனதிபதி திரு. கிரி நேற்று சென்னையில் ஆரம்பமான உலகப் பொருட்காட்சியை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த வைபவத்துக்கு தமிழக முதலமைச்சர் திரு. ஸி. என். அண்ணுதுரை தலைமை வகித்தார்.

"இன்னல்கள் எவ்வளவுதான் மலைபோல் வந்தாலும் அதனை எதிர்த்துப்போரிடக் கூடிய சக்தி நமக்கு இருக்க வேண்டும்'' என்று உபஜனதிபதி கூறிஞர்.

150 அடி உயரமுள்ள பொருட்காட்சி கோபுரத்தை தமிழ்நாடு திரு. உஜ்ஜல்சிங் திறந்து வைத்தார்.

300 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த சர்வதேச பொருட்காட்சியில் 160க்கு மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

## சந்திரனை அளக்கும் விண்வெளி கலம்
### அமெரிக்கா இன்று அனுப்புகிறது

கேப்கென்னடி, ஜன. 22
சந்திரனை அளப்பதற்காக அமெரிக்கா நாளை விண்வெளிக்கலமொன்றை அனுப்புகிறது. அளவைக் கருவிகள் இணைக்கப்பட்ட இந்த ஆளில்லாத விண்வெளிக்கலம் இங்கிருந்து இன்று அனுப்பப்படுமென அறிவிக்கப்பட்டது. சந்திரனுக்கு அளப்பதற்காக அனுப்பப்படும் முதலாவது விண்வெளிக்கலம் இதுவே.

குறிப்பிட்ட நேரத்திலும் பார்க்க ஆறுமணி நேரம் தாமதமாகவே அளவை விண்வெளிக்கலம் அனுப்பப்படுகிறது. மின்சாரக் கோளாறே காரமெனத் தெரிவிக்கப்பட்டது.

காலப்போக்கில் இரு விண்வெளி வீரர்கள் சந்திரனுக்கு அளவைக் கருவிகள் பூட்டப்பட்ட விண்வெளிக்கலத்தில் அனுப்பப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஜனநாயகத்தின், நமது சுதந்திர நாகரீகத்தின் ஆணிவேர், தெய்வத்தின்பால் நமக்குள்ள நம்பிக்கை தான். அந்தவேரை வெட்டி விட்டால் ஜனநாயக சுதந்திரம் என்ற மலர்கள் வாடிச் செத்து விடும்

—முன்னாள் டென்மார்க் அமைச்சர் ஒலியான்கிராப்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஹு தை மீ 9உ (23-1-68


## அடையாள அட்டை மசோதா

இலங்கையில் வாழும் மக்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதற்கான சட்டம் வரவிருக்கிறது. இதற்கான மசோதா இம்மாதம் 26 ந் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் நல்ல நோக்கத்தைக் கொண்டிருப்பதாயினும் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் அது மிக ஆபத்தான திட்டமென்றே சொல்லலாம்.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் சம்பந்தமாக இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட 'சிறிமா சாஸ்திரி' ஒப்பந்தம் அமுல் நடத்தப்படவிருக்கிறது. இலங்கையில் ஒன்பதே முக்கால் லட்சம் இந்திய வம்சாவழியினர் வாழ்கிறார்கள் என்ற அடிப்படையில் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின்படி ஐந்தேகால் லட்சம் பேருக்கு இந்தியப் பிராஜாவுரிமை வழங்கி இந்தியாவுக்கு, இந்திய அரசாங்கம் திருப்பி அழைத்துக் கொள்ளவேண்டும். மூன்று லட்சம் இந்திய வம்சாவழியினருக்கு இலங்கை அரசாங்கம் இலங்கை பிரஜாவுரிமை வழங்கவேண்டும். மிகுதி ஒன்றரை லட்சம் பேரி பற்றி பின்னர் தீர்மானிப்பதென்றும் அந்த ஒப்பந்தம் கூறுகிறது. இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கான சட்டமும் கொண்டுவரப்பட்டுள்ளது. இதை அமுல் நடத்துவதற்கான விதிகள் கொண்டுவரப்படவிருக்கின்றன. அதாவது இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படவிருக்கும் ஐந்தேகால் லட்சம் மக்களில் முதல் கோஷ்டியினர் அடுத்த மாதத்துக்குள் இந்தியாவுக்கு புறப்பட்டுச் செல்லவிருக்கின்றனர். இந்தியாவுக்கு அனுப்பப்படுபவர்கள் மீண்டும் இங்கு திரும்பி வந்துவிடுவார்களோ என்ற அச்சத்தினாலும் இங்கிருந்து அனுப்பப்படுபவர்களுக்குப் பதிலாக இந்தியாவிலிருந்து புதிதாக சட்டவிரோதமாக யாரும்வந்து குடியேறுமல் தடுக்கவும் இலங்கையில்வாழும் சகல மக்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

இந்த மசோதா பற்றிய விபரம் இன்னும் தெரியவில்லை. ஆயினும் இந்த மசோதா நிறைவேறி அதுசட்டமானதும் அந்த நேரத்தில் இலங்கையில் வாழும் சகல மக்களினதும், இலங்கைக்கு சட்டரீதியாக வந்துசேரும் அனைவரினதும் பெயர்கள் பதிவுசெய்யப்பட்டு அவர்களில் பதினெட்டு வயதுக்குமேற்பட்டவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்று இதற்குமுன் தெரிவிக்கப்பட்ட யோசனைகளிலிருந்து ஊகிக்கலாம்.

பங்கீட்டரிசிப் புத்தகம் அரிசி பெறுவதற்காக வழங்கப்பட்டுள்ள போதிலும் இப்பொழுதுகடைப்பிடிக்கப்படும் முறைகளிலிருந்து அது பிரஜாவுரிமை அத்தாட்சிப் பத்திரமாகவும் பயன்படுத்தப்படுகிறது. இப் பங்கீட்டரிசிப் புத்தகங்களைப் பெறுவதில் இலங்கையிலேயே பிறந்து வளர்ந்த இலங்கையரான தமிழரும் முஸ்லிம்களும் பெரும சிரமத்துக்குள்ளாகியிருக்கின்றனர். பங்கீட்டரிசிப் புத்தகம்வைத்திருந்தாலும்கூட பொலிசாருக்கோ, இராணுவத்தினருக்கோ சந்தேகம் ஏற்பட்டாலும் 'மொட்டைக் கடிதம்' கிடைத்தாலும் எச்சமயத்திலும் வீடுபுகுந்து அந்த வீட்டிலுள்ளவர்களை 'கள்ளத்தோணி' என்ற சந்தேகத்தின்மீது கைதுசெய்து காவலில் வைக்க அவர்களுக்கு அதிகாரமிருக்கிறது இராமசாமியையும் இலட்சுமியையும் அல்லது அபூபக்கரையும் பரீதாவையும்தான் 'கள்ளத்தோணி' என்று கைதுசெய்வார்களேயொழிய அப்புகாமியையும் அலிஸ்நோனாவையும் கைது செய்யத் துணியமாட்டார்கள்.

நெடுந்தீவில் வசிக்கும் வள்ளியம்மைக் கிழவி யாழ்ப்பாணத்துக்குவரும் போது அரசாங்கம்வழங்கிய அடையாள அட்டையைக்கொண்டுவர மறந்துவிட்டால் 'கள்ளத் தோணி' என்று முகாமில் அடைத்து வைக்கலாம்; அல்லது அவருக்கே தெரியாத நாட்டுக்குக் கப்பலேற்றி அனுப்பலாம். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்துவிட்ட தென்றும் தமிழரும் முஸ்லிம்களும் இன்னமும் சந்தேகப் பிரஜைகளாகவே கருதப்படுகிறார்கள். இந்நிலையில் அடையாள அட்டைகள் தமிழ்பேசும் மக்களை மேலும் அடிமைகளாக்கவே உதவிபுரியும் இலங்கையே வன்மையாகக் கண்டிக்கும் இன ஒதுக்கல் கொள்கையைப் பின்பற்றும் தென்னுபிரிக்காவில் தவிர வேறு எங்கும் மக்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் முறை இருப்பதாகத் தெரியவில்லை.

அடையாள அட்டைச் செலவு ஒருபுறமிருக்க இதில் லஞ்ச ஊழல்களுக்கும் இடமேற்படும் என்பது மறுக்க முடியாதது. அடையாள அட்டைகள் சுலபமான விஷயமல்ல.

இதுமிக முக்கியமான, ஒரு சமூகத்தையே பாதிக்கக் கூடிய, அவமானப்படுத்தக்கூடிய விஷயம். கட்சி இன, மத வேறுபாடுகளை மறந்து தமிழ் பேசும் மக்கள் இது விஷயத்தில் ஒன்று சேர்ந்து பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்று ஆபத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# மாணிக்கவாசகரை இருபெரும் பொறுப்புகள் எதிர் நோக்குகின்றன

## இங்கிலாந்து செல்லும் அவருக்கு உடுவிலில் நடந்த பிரிவுபசாரம்

உடுவில், திங்கள்

''அரசாங்க நிர்வாக ஒழுங்கு முறைகள், பாராளுமன்ற நடைமுறைகள் சிறப்பாகவும் ஒழுங்காகவும் அமைந்துள்ளது இங்கிலாந்து தேசத்திலதான். அத்தனை சிறப்பும் கட்டுப்பாடும் நிறைந்த ஒழுங்கு முறைகளை நேரடியாகப் பார்த்து படித்து இலங்கையிலும் அதே மாதிரியான அரசாங்க நிர்வாக, பாராளுமன்ற முறைகளை புகுத்தும் நோக்கமாகவே திரு. மாணிக்கவாசகரை அரசாங்கம் இங்லாந்துக்கு அனுப்ப முடிவு செய்துள்ளது திரு. மாணிக்கவாசகர் பலவருட அனுபவசாலி. அகில இலங்கைக்கும் பரிபாலனம் அளிக்கக் கூடியதான உயர் பதவிகளை மீண்டும் இவருக்கு அரசாங்கம் வழங்கவேண்டும்.

திரு. மாணிக்கவாசகர் இலங்கைக்கு மீண்டும் வரும்போது நாட்டுக்கும் தமிழுக்கும் செய்ய வேண்டிய இரண்டு பெரும் பொறுப்புக்கள் அவரை எதிர் நோக்கியுள்ளன.

முதலாவது தமிழ்க் கிராமங்களில் வைத்தியம் புராணம், முதலிய துறைகளில் சிறந்த பயன்தரவல்ல பெறுமதி வாய்ந்த ஏட்டுச் சுவடிகள் பாதுகாப்பற்று அழிந்து கொண்டு வருகின்றன அவற்றை ஒரு நூல் நிலையம் அமைத்து பாதுகாத்து வைத்து எதிர்காலச் சந்ததியினரும் பயன்பெற ஆவன செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் மத்திய அரசையே பிடிக்குமளவிற்கு மாவட்டசபைகள் அமைப்பு முறை விரைவில் வர இருப்பதாக அறியப்படுகிறது. அப்படி ஏற்படும் பட்சத்தில் அவ்வமைப்பு முறையை நிர்ணயிக்கும் பொறுப்பும் இவரிடமே ஒப்படைக்கப் படல்வேண்டும்.

உள்ளூராட்சி உதவியாணையாளராக இருந்து இங்கிலாந்து செல்லும் திரு. எஸ் சீ. மாணிக்கவாசகருக்கு உடுவில் கிராமசபை சார்பில் அளிக்கப்பட்ட பிரிவுபசார பாராட்டு விழாவில் பேசிய யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு சி. முருகேசபிள்ளை மேற்கண்டவாறு கூறினர்

உடுவில் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இவ் விழாவிற்கு கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமை வகித்தார்.

புதிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு வி. முருகவேள், வலி-வடக்கு காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ், திரு. வீ. சீராளசிங்கம் உட்பட பலரும் பாராட்டுரை வழங்கினர். திரு எஸ். ஸி. மாணிக்கவாசகர் நன்றி தெரிவித்தார்.

## உப உணவு உற்பத்தியில் மாணவர்களின் முயற்சி

யாழ்ப்பாணம், செவ்.

வசாவிளான் அச்சுவேலி வீதியில் அமைந்திருக்கும் சிறுவர் சீர்திருத்தப்பாடசாலை மாணவர்களும்தொழிலாளரும் கூட்டாகச் சேர்ந்து உப உணவுப் பொருட்களை உற்பத்திசெய்வதில் ஆர்வம்காட்டிவருகின்றனர் குடிசைக்கைத்தொழில் இலாகாவுக்குச் சொந்தமான பதினுறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியைக் குத்தகைக்கு எடுத்து, அதில் உருளைக்கிழங்கு வெங்காயம் மிளகாய், போன்ற பயிர்களை சாகுபடிசெய்து வருகின்றனர். [ந. நி

# வெளிநாட்டு தூதரகங்களில் சுதந்திரதின கொண்டாட்டமில்லை

## இலங்கைஅரசாங்கத்தின் சிக்கனநடவடிக்கை

கொழும்பு, திங்கள்

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில இவ்வாண்டு எவ்வித உத்தியோகபூர்வமான சுதந்திர வைபவங்களும் நடக்கமாட்டாது. இலங்கையின் பொருளாதார நிலைகுறித்து பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு இந்தச் சிக்கன நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

எனினும் மத வைபவம் மற்றும் சிக்னமான கொண்டாட்டங்களும் நடைபெறும்.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையைப்பாரர்ட்டிச் சில வெளிநாட்டுப் பத்திரிகைகள் இலங்கையின் முன் மாதிரியைப் பின்பற்றவேண்டுமென தலையங்கங்கள் எழுதியுள்ளன.

## இன்றைய பலன்

[23-1-68]

செவ்வாய்க்கிழமை

[தை மீ 9 உ]

நட்சத்திரம்- சுவாதி இரவு 8-22மேல் விசாகம்.

திதி- அட்டமி பகல் 11-51 மேல் நவமி.

சுபநேரம்- 11-05— 12-35.

ராகுகாலம்- 3-35— 5-05.

இன்று பிறந்தவர்களுக்கு:- மணப்பந்தலில் அமரச் சிறப்பான ஆண்டு காதல்கலகலக்கும் கல்விச் சுகமுண்டு அபாயகரமான காரியங்களைத் தவிர்த்தல் நன்று ஓவியர்களுக்கு உற்சாகம் பெருகும் வணிகத்துறையில் வளமும, வாழ்வில் நலமுமுண்டாம்.

மேஷம்- வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம்.

ரிஷபம்- நண்பர்கள் தொல்லை, நடையில் தளர்ச்சி.

மிதுனம்- தந்தையின் அறிவுரை, தடைகள் நீங்கும்.

கடகம்- அதிகாரப் பேறு, வசதிகள் வளரும்.

சிம்மம்-அருளும், பொருளும் அவசியம் கிடைக்கும்.

கன்னி- வீணான செலவு, விரக்தி மனப்பான்மை.

துலாம்- அடிசறுக்கும், ஆணவத்தை அடக்கு.

விருச்சிகம்- சொற்சிறப்பு, சொகுசான வாழ்வு

தனுசு- நினைவின் திழலாட்டம், நிம்மதி பறக்கும்.

மகரம்- மாதுருவழி மகிழ்ச்சி, மாண்புடன் வாழ்தல்.

கும்பம்- புத்திரர் புகழ், புதிய உற்சாகம்.

மீனம்- ஆயுதபயம், அவசரம் வேண்டாம்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

## ரேடியோ லைசென்ஸ்

யாழ்ப்பாணம், செவ்

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தபால்தந்தி இலாகாவினர். ரேடியோ லைசென்சை பெறும் மக்களுக்கு முன்னறிவித்தல் கொடுத்துவருகின்றனர்.

ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று கணக்கெடுத்துப் பதிவதுடன் இவ்வாண்டுக்கான லைசென்ஸ்... வர்களை உடனே... வண்ணமும் கூ... னர்.

# 'தமி... உய...

தமிழாராய்ச்சி... டுக்கு சென்னை செ... ஒரு நண்பர் அ... சனச் முத்திர... அதன் மத்திய... அடித்த தமிழ்... கொந்தளிப்பையு... ணித்து எழுதிய ஓ... தில் ''சென்னையி... டிசம்பர் மாதத்... மொழி ஐயாயி... உயர வளர்ந்து... என்று குறிப்பி... நற்கருப்பஞ்சா... தேன் கலந்... கலந்து செ... திஞ்சுவைகலந்தல்... கும மாணிக்... நம்மை அதிகார... இனிதாகத் து... விடுகிறது. அத... வில் தமிழாராய்ச... ரைகள் நம்மை... பாற்கடலில் நீ... கின்றன. இரவிசே... இசையும் ஜீவ... பொங்கிப் பி... போல கலை அரங்... கள் நிலாமுற்றத்...

# செய்தித் திரட்...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் இந்தியாசென்றுள்ளார் நேற்று முன்தினம் காலை இந்தயா பயணமான இவர், இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா செல்வோரின் புனர்வாழ்வுக்காக இந்திய அரசாங்கம் செய்யும் ஏற்பாடுகள் பற்றி இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியையும் இந்தியப் புனர்வாழ்வு மந்திரியையும் சந்தித்துப் பேசுவார்.

### சுதந்திரக்கட்சி நிர்வாகக் கமிட்டி

அடுத்த மாதம் 1-ம் திகதி ஸ்ரீலங்கா கூட்டுக்கட்சிக்கும் அதன் சக கூட்டாட்சி கட்சிகளுக்குமிடையில் ஏற்படவிருக்கும் கூட்டு வேலைத்திட்டத்தை ஆராயும் பொருட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிர்வாகக் கமிட்டி கூடும்.

### வெளியே 15 கப்பல்கள்

பதினைந்து உணவுக்கப்பல்கள் நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்திற்குவெளியேநின்றுகொண்டிருந்தன இவைகளில் ஐந்து உணவுக்கப்பல்கள்.

### சுதந்திரதினத்தை பகிஷ்கரிப்பதா இல்லையா?

சுதந்திரதின வைபவத்தைப் பகிஷ்கரிப்பதா, இல்லையா என்பது பற்றித் தீர்மானிக்க திருக்கோணமலை நகராண்மை கழகத்தின் விசேஷ கூட்டம் இம் மாதம் 30-ந் திகதி நடக்கவிருக்கிறது.

திருமலைநகராண்மைக்கழக உப தலைவராக திரு பி. கிருஷ்ணசாமி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

### ஹஜ் அதிகாரி... நியமனம்

இலங்கை நிர்... யைச் சேர்ந்த... எம். இஸட் பா... யாத்திரை கால... அரேபியாவில்... யாத்திரிகர்களி... கவனிப்பதற்கா... யாக நியமிக்கப்... இவர் இம்மா... திகதி ஜிந்தாவுக்... மாகிருர்

### 4 மாதத்துக்... ஒருமுறை ே...

துறைமுக சர... டுத்தாபன ஊ... நான்கு மாத... ஒருமுறை போ... கப்படுமென்று... சரக்குக்கூட்டுத்... வர் திரு. அ... தனு தெரிவித்து...

### மூலிகை உற்...

ஆயுர்வேத ம... கைகளின் இறக்... வெகுவாகக்... கப்பட்டுள்ளது. ... யின் பல்வேறு... லும் விலையுயர்ந்... மூலிகைகள்... ந்து வந்ததா... ற்றை வைத்திய... னிக்காமல் விட்ட... வுற்றுவருவதாயு... துக்காட்டப்... இலங்கை மருந்... களை உற்பத்தி... டம் ஒன்றும்... பட்டுள்ளது.

### சிதைந்த ஓவியங்கள்

சிதைக்கப்பட்... ஓவியங்கள் விரை... மக்களின் பார்வை... படும். இக்குகை... களை கண்ணுடிக்... பாதுகாப்பளிக்க... வடிக்கைகள்... டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ்மொழி ஐயாயிரம் அடி உயர வளர்ந்து விட்டது!'

தமிழாராய்ச்சி மகாநாட் ...க்கு சென்னை சென்றிருந்த ...ரு நண்பர் அங்கு கூடிய ...னச் சமுத்திரத்தையும் ...தன் மத்தியில் அலை ...டித்த தமிழ் வளர்ச்சி ...ளாந்தளிப்பையும் வரு ...ணித்து எழுதிய ஒரு கடிதத் ...தில் "சென்னையிலே இந்த ...சம்பர் மாதத்தில் தமிழ் ...மொழி ஐயாயிரம் அடி ...யர வளர்ந்துவிட்டது" ...ன்று குறிப்பிடுகிறார். ...ற்கருப்பஞ்சாற்றினிலே ...தன் கலந்து பால் ...லந்து செழுங்கனித் ...ஞ்சுவை கலந்தன்ன தித்திக் ...ம் மாணிக்கவாசகம் ...ல்லம அதிகாலையிலேயே ...ணிதாகத் துயிலெழுப்பி ...டுகிறது. அதன்பின் பக ...ல் தமிழாராய்ச்சிப் பேரு ...ரகள் நம்மைத் திருப் ...ந்கடலில் நீராட்டிவிடு ...றன. இரவிலே தமிழும் ...சையும் ஜீவநதிகளாகப் ...பாகிப் பிரவாகிப்பது ...பால கலை அரங்கக் காட்சி ...ள் நிலாமுற்றத்தில் தேவ

கன்னியருடன் சூழ அமர்ந்து திராட்சை ரசம் பருகுவது போல். சென்னையில் நாளும் பொழுதும் உதயமும் அஸ்தமனமும் தெரியாமலே போய்க் கொண்டிருக்கின்றன. ஒரு தினம் ஓர் இரவு ஆடல் பாடல் நிகழ்ச்சியின்போது யமுனைக்கரையில் கண்ணன் குழல் ஊத ஆயிரம் கன்னியர் அவனைச் சூழ்ந்து கூடி ஆடிய பிருந்தாவன கோலாகலங்களைக் கண்டேன்.

ஏற்படுகிறது. அலங்கார ரதங்கள் ஒவ்வொன்றும் மெய்யாகப் பழந்தமிழ் நாட்டிலிருந்துதான் நேரே வந்திறங்கி மறுபடி கடியானத்துள் சென்று மாறந்தனவோ அந்த நாதத்தின் இன்னிசையில் மிரயம் தாட்டியது. நமக்குப் பின்னே எப்படியொரு மகோன்னத காலம் புகழுடன் பிரகாசித்திருக்கிறது ஒரு பெரு மூச்சாக வெளிப்படுகிறது. இற்றைத் திங்கள் இவ் வெண்

சுவாமிகள் கண்ட தமிழ் நாட்டையும் காண்கிறோம். கவிச் சக்கரவர்த்தி கம்பனின் கைகளில் காவியம் உருவாகிவருகிறது — ஒரு காட்சியில்.

மிதிலைநகர் வழியே முனிவரைப் பின்தொடர்ந்துவரும் தசரத குமாரனை உப்பரிகையிலிருந்து ஜனககுமாரி மகிழ்ச்சி ததும்ப நோக்குகிறாள். கண்ணோடு கண் நோக்குகிறது. தெய்வீகக் காதல் அரும்பி இராமாயண காவியமும் பிறக்கின்

பேரையும் சிலைகளாகப் பார்க்கிறோம் ஒரு வண்டியில்.

அகில உலகத்தையும் கவரும் சக்தி படைத்திட்ட சிற்பிகளின் கைநாத ஒலியில் உருவான கோபுரத்தையும், வாழ்வின் அறம் கூறும் திருக்குறளையும் தாங்கி மகாநாட்டுக் கொடி தந்தையர் நாடென்ற பேச்சொலியாகக் காற்றில் படபடவென்று அடிக்கும் போது நமக்கும் ஒரு சக்தி நம்பிக்கை பிறக்கிறது மூச்சினிலே.

(நாளை முடிவடையும்)

## சென்னையில் நடந்த தி. மு. க. பட்டாபிஷேக விழா

'சென்னை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது' என்று குறிப்பிட்டு அதனை அவர் வருணிக்கையில் புதிதாகப் பதவி ஏற்றிருக்கும் திராவிடமுன்னேற்றக் கழக அரசின் பட்டாபிஷேக விழாப்போல இம்மகாநாடு அமைந்துவிட்டது. எங்கும் மின்சார தீபாலங்காரம் கூவம் நதிக்கரையின் தீவுத் திடலில் நிர்மானிக்கப்பட்டிருக்கும் எழில்மிகு பூம்புகார் நகரும் அதற்கு அமைந்த புகார் வாயில், வஞ்சி வாயில், மதுரைவாயில் களும் நம்மைத் தமிழ் வளர்த்த சேர சோழ பாண்டியர் காலத்துக்கே அழைத்துச் சென்றுவிடுகின்ற காவிரிநதி தீரத்தில் மகோன்னதம் பெற்றிருந்த காவ்யகால பூம்புகாரையும் அன்னுள் பட்டினம் பாக்கத்தையும் மருவூர்ப்பாக்கத்தையும் இந்தக் கூவம் நதிக்கரைக்கு கொண்டு வந்துவிட்டவர்களை எப்படிப் புகழ்வ

ணிலவில் எந்தையுமிலே. எம் குன்றும் பிறர் கொண்டார் - என்று பாரி மகளிர் தந்தையை இழந்திருந்த காலத்தில் கூறிப் பிரலாபித்த வாக்குகளே நினைவு வருகின்றன.

பறம்பு மலைப்பாரி மன்னின் கொடைகளில்பெருமை கொண்ட மூவேந்தர்களும் அவனைச்சூழ்ச்சியால் கொன்றதாகத் இந்தியநாடு தன் சுதந்திரமிளந்து அந்நியரிடம் அடிமைப்பட்டு பிச்சைக்கார நாடாகப்போன கதையும் இதுமாதிரித்தானே நடைபெற்றது. சோப்பும் சீப்பும் கண்ணாடியும் கொண்டுவந்து கொடுத்த வெள்ளைக்காரரிடம்நாம் ஏமாந்துபோனோம் அவன் காட்டிய பெண்களிடம் நமது அன்றைய மன்னர்கள் மதி இழந்து போனார்கள். பாரதிகவிதைகள் என்ற சோப்பை உபயோகித்து இந்த டிசம்பர் மாதத்துப் புது அருவியில் நீராடி புனிதர்களாவோம். இள

றது.

பாரதத் தாயின் ஐம்பெரும் காப்பியங்களுடனே திருவள்ளுவர் கண்ட தமிழகத்தையும் காண்கிறோம். அதன் பின்னால்.

காட்சி சுழல்கிறது.

மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெலென்று ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை நமது கண்முன்னே தோன்றுகிறது. ஆமாம், ஆனைகள் தாம் போரடிக்கின்றன.

தமிழுக்குத் தலைகொடுத்த குமணவள்ளல் முகத்திலே மந்தகாசம் தவழ எதிரில் வந்துநிற்கிறார்.

பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும்!

கனகவிசயன் தலையிலே கல் சுமந்து, கண்ணகிக்குச் சிலைவடித்து விழா எடுத்த சேரன் செங்குட்டுவன் தோள் நிமிர்ந்து கம்பீரமாகக் காட்சி தருகிறான்.

சமுத்திரம் கொந்தளிக்கிறது அலைகள் குதித்தெழுகின்றன. புயலா? அல்ல அதோ அந்த கப்பலோட்டிய தமிழனின் சிலையைப் பார்த்துவிட்டுத்தான்.

அரண்மனை முரசுகட்டிலில் படுத்துக் கண்ணயர்ந்துவிடும் புலவருக்கு மன்னன் விசிறி கொண்டு வீசும் புறநானூற்றுக்காட்சி.

அரியது கேட்கின் வரிவடிவேலோய் அரிது அரிது மானிடராதல் அரிது - என்று பாடிய ஔவை நீண்டகாலம் வாழ்ந்து

### அ. செ. மு. எழுதுகிறார்

தென்றே தோன்றவில்லை" என்று எழுதுகிறார். அவர் எழுதியதை அப்படியே தருகிறேன். நீங்களும் படியுங்கள்.

கண்ணகி வழக்குரைத்த காட்சியையும் கம்பராமாயணத்து மிதிலைக்காட்சியையும் இங்கு நடைபெற்ற ஊர்வல வண்டிகளில் இளங்கோவும் கம்பனும் பார்த்திருந்தால் "நாம் கற்பனையாகப் பாடிய காட்சிகள் தாமா இத்தனை அழகாக இருக்கின்றன!" என்று தங்களுக்குள்ளே எண்ணி வியந்திருப்பார்கள். பாரி முல்லைக்குத் தேர் ஈந்த காட்சியை இப்பொழுது நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது. தன் அருமைப் புதல்வனைத் தேர்க்காலில் உருட்டிக்கொன்ற மன்னனின் மனுநீதியை கண்முன்னே பார்த்தபோது அதோ அத்தனை வேகத்தில் நடுத்தெருவிலே கண்ணை மூடிக்கொண்டு சவாரி விடும் மோட்டாரின்மீது ஒரு கல்லைத் தூக்கி போடலாமா என்று ஆத்திரம் பொங்குகிறது மனத்திலே. முக்கால் மைல் நீளமான இந்த ஊர்வலத்திலே இப்படி பழந்தமிழ் நாட்டுக் காட்சிகளாக ஒன்றன்பின் ஒன்றாய் 27 இரதங்களும் நம்மைத் தாண்டி நம்மைத் தாண்டி அப்பால் போன பிற்பாடுதான் நாம் சென்னை வீதியில் நிற்கிறோம். என்ற சுப நினைவு

ங்கோ நமக்களித்த சிலப்பதிகாரம் என்ற சீப்பை உபயோகித்து எங்கள் தலையை வாரி அலங்காரம் செய்வோம். திருக்குறள் கண்ணாடியிலேயே இனிமேல் நமது அழகைப் பார்த்து மகிழ்வோம் என்று இங்கு ஒருவர் அழகாகக் கூறினார்.

மெய்தான் நண்பரே இதுவரை காலமும் அந்நிய

## சமுத்திரம்கொந்தளிக்கிறது; அலைகள்குதித்தெழுகின்றன —புயல்!?

நாகரீகத்திலும் வாழ்க்கையிலும் கவர்ச்சியுற்று தம்மையிழந்துபோன தமிழ் நாட்டவருக்கு தமிழர் பண்பாட்டிலும் நாகரீகத்திலும் அவர்தம் சிந்தையைத் திருப்ப இதுமாதிரி விழாக்கள் அலங்காரப் பூம்பந்தல்கள் ஊர்வலங்கள் என்பன இன்றைக்கு வேண்டியனவே.

"காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக் கோதை குழலாட வண்டின் குழாமாட பாவை நோன்புக்காக சீதப் புனலாடுவதற்கு அதிகாலையில் எழுந்து நீராடச்செல்லும் மார்கழிப் பாவையரை ... காரவண்டியில் பார்த்த போது ...

பெறற்கரிய மானிடவாழ்க்கையின் பெருமையை உலகுக்கு உணர்த்த அதிகமான் அவளுக்கு ஆயுள்கனியாக நெல்லிக்கனி ஈந்த காட்சி அபூர்வம்.

நாதஸ்வர மேளகாரர்களையும் பரதபாரம்பரியம் காக்கும் பரதநாட்டியக் கலைஞர்களையும் சுமந்துவருகின்றன இரு வண்டிகள்.

பாரதியும், பாரதிதாசனும், கவிமணியும், போப்பும், கால்டுவெல்லும், வீரமாமுனிவரும், திரு. வி. க. வும், தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதரும், மறைமலை அடிகளும் இந்த செந் ... காட்சி ... சிலையாகி விட்டார்கள். அத்தனை

...ன லைசென்ஸ் எடுக்காத ...ர்களை உடனே எடுக்கும் ...ண்ணமும் கூறிவருகின்ற ...ர். [இ. நி]

## திரட்டு

### ...றஜ் அதிகாரியாக ...யமனம்

இலங்கை நிர்வாக சபை ...யைச் சேர்ந்த ஜனாப் எச். ...ம். இஸட். பாரூக் ஹஜ் ...ாத்திரை காலத்தில் சவூ ...தி அரேபியாவில் இலங்கை ...யாத்திரிகர்களின் நலனைக் ...கவனிப்பதற்கான அதிகாரி ...யாக நியமிக்கப்பட்டுள்ளார் ...இவர் இம்மாதம் 27-ம் ...தேதி ஜிந்தாவுக்குப் பயண ...மாகிறார்

ஃ ஃ

### மாதத்துக் ...ருமுறை போனஸ்

துறைமுக சரக்குக் கூட் ...டுத்தாபன ஊழியர்களுக்கு ...ண்டு மாதங்களுக்கு ...ருமுறை போனஸ் வழங் ...கப்படுமென்று துறைமுக ...சரக்குக்கூட்டுத்தாபன தலை ...வர் திரு. அபயகுணவர்த் ...தன தெரிவித்துள்ளார்.

ஃ ஃ

### ...மூலிகை உற்பத்தி

ஆயுர்வேத மருத்துவ மூலி ...கைகளின் இறக்குமதி இனி ...வருவாகக் குறைக்கப் ...பட்டுள்ளது. இலங்கை ...யின் பல்வேறு பாகங்களி ...லும் விலையுயர்ந்த மருந்து ...மூலிகைகள் முன்புவளர் ...ந்து வந்ததாகவும் இவ ...ற்றை வைத்தியர்கள் கவ ...னிக்காமல் விட்டதனால் அழி ...ந்துவருவதாயும் எடுத ...்துக் காட்டப்பட்டுள்ளது. ...இலங்கை மருந்து மூலிகை ...களை உற்பத்தி செய்யும்திட் ...டம் ஒன்றும் தயாரிக்கப் ...பட்டுள்ளது.

ஃ ஃ

### ...தைந்த ...ஓவியங்கள்

...சிதைக்கப்பட்ட சிகிரியா ...ஓவியங்கள் விரைவில்பொது ...மக்களின் பார்வைக்குவிடப் ...படும். இக்குகை ஓவியங் ...கள் கண்ணாடிக் கூண்டினுல் ...பாதுகாப்பளிக்க ஏற்ற நட ...வடிக்கைகள் எடுக்கப்பட் ...டுள்ளன.

## தோல்விக்கு காரணம்

யாழ்ப்பாணம், செவ்;

'சாவகச்சேரி நகரசபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சிக்கு ஏற்பட்டதோல்விக்கு தமிழரசுக்கட்சித் தலைமைப் பீடமே முழுப்பொறுப்பாகும். அவர்களது கவலையீனமே இதற்குக் காரணமாகும்'.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற சாவகச்சேரி நாரசபைத்தேர்தல் முடிவுகள் பற்றித் தெரிவிக்கையில் தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணிஉபதலைவர் திரு கே. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

இத்தேர்தலில் 11 வட்டாரங்களில் எட்டுவட்டாரங்கவில் காங்கிரஸ் ஆதரவாளர்களும், மூன்று வட்டாரங்களில் மட்டும் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்களும் வெற்றியீட்டியிருந்தனர்.

[கா. நி.]

ஈழத்துக் கலைஞர்களுக்கு

## இந்தியாவில் இடம் இல்லை என்பது உண்மையா?

ஈழநாட்டின் எழுத்தாளருக்கும் இசையாளருக்கும் கலைஞர்களுக்கும் தமிழகம் தக்க மதிப்புக் கொடுப்பதில்லையென்ற ஒரு குறைபாடு இங்கு பல காலமாக இருந்து வந்தது.

இது சுத்த அபத்தமான அபாண்டமான ஒரு பொய் என்பதை சமீபகால நிகழ்ச்சிகள் சில நிரூபித்துவிட்டன.

எழுத்தாளர் உலகத்தை எடுத்துக் கொண்டால், ஈழத்தில் பிறந்து வளர்ந்து, இங்கேயே பல இலக்கியத் தொண்டுகள் புரிந்து, இன்று இந்திய பிரஜையாகிவிட்ட திரு. சிவபாதசுந்தரம், தமிழ்நாட்டு எழுத்தாளப் புலிகள் கொண்ட எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருப்பது ஈழத்தவர் எல்லோரும் பெருமைப் படக் கூடியதோர் விஷயம்.

இசைப்பகுதியை எடுத்துக் கொண்டால், ஈழத்து நாகசுரவித்வான் திரு. என். கே. பதமநாதன் மியூஸிக் அக்கடமியின் இசைவிழாவில் வாசிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது இன்னுமொரு மகிழ்ச்சியூட்டும் நினைப்பு. பத்மநாதனின் வாசஸ்திரியை நாம் வானொலியில் கேட்டபோது புளகாங்கிதம் அடைந்தோம். இவர் மட்டுமல்லாமல் ஈழத்து தவில்வித்வான்கள் இரண்டொருவரும் இசைவிழாவில் இடம்பெற்றார்கள்

கவிதைப் பகுதியை எடுத்துக் கொண்டால் ஈழத்துக் கவிஞர் இருவருக்கு அனைத்துலக தமிழ் மகாநாட்டில் பதக்கமும் சான்றிதழும் வழங்கப் பெற்றது முன்னெப்போதும் எமக்கு இடையாத ஒரு பெரும் கௌரவம் யாரும் மறுக்க முடியாது.

கவிஞர் இ நாகராஜனும், இ அம்பிகைபாகன் என்ற 'அம்பியும்' 'பூம்புகாரில் ஒரு நாள்' என்ற தலைப்பில் எழுதிய கவிதைகளுக்கு இ

பரிசுகள் வழங்கப்பட்டன. ஆயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகள் படைத்தவர்களுள் நமது ஈழநாட்டுக்கவிஞர் இருவர் பதக்கமும் சான்றிதழும் பெற்றார்கள் என்றால் அது நாம் பெருமைப்பட வேண்டிய காரியமல்லவா?

இவை மட்டுமன்று!

இச்சமயம் நடந்துகொண்டிருக்கும் திருவையாறு தியாகராஜர் விழாவில் ஈழத்து இளைஞரான கரவெட்டி கருணாகரன் என்பவர் இரண்டொரு நாட்களுக்கு முன் பாடியதை வானொலியில் கேட்டபோது எமது குதூகலம் கரை கடந்து போய்விட்டது.

ஈழத்து இசையாளர் ஒருவர் தியாகராஜர் விழாவில் கலந்து கொண்டது இதுவே முயன்முறை என்று நான் நினைக்கிறேன்.

இப்படியெல்லாம் நடக்கும்போது, தமிழகமான தாயகம் சேயகத்தைப் புறக்கணிகிறதென்று கூசாமல் கூறமுடியுமா?

இதிலுள்ள உட்பாத்திரம் என்னவென்றால் இதுதான்.

இங்குள்ள சில எழுத்தாளர்கள் தமிழ்நாட்டு பத்திரிகைகளுக்குக் கதைகளும் கட்டுரைகளும் அனுப்பி அவை பிரசுரிக்கப்படாமை கண்டு வேதனையும் விரக்தியுமுற்றுவிடுவதுதான் காரணம்.

தரமான எழுத்துக்கும் இசைக்கும் கவிதைக்கும் தாயகமாயினும்சரி சேயகமாயினும்சரி எங்கும் மதிப்புக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

ஆகையால் ஈழத்தில் இலக்கியமும் இசையும் படைப்பவர்கள் தரமான சிறந்த படைப்புகளை சிருஷ்டித்தால் அவை கட்டாயம் மதிப்புக்குரியனவாகும்.

கலைஞர்கள் வீண் கோபக் குரோதங்களை விடுத்து உண்மையான மூலப்படைப்புகளை வெளியிட முன்வர வேண்டும்.

## நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களவாடிய மாடுகளை பங்கு போடுகிறார்கள்

## கால்நடைச் சொந்தக்காரர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

அரியாலை, திட்டி, குருநகர் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி ஆடு மாடுகள் கடத்தப்படுவதாகவும் சிலகளவாடப்பட்டுப் பங்குபோடப்படுவதாகப் பொலிசாருக்கு கிடைத்த புகார்களைத் தொடர்ந்து கட்டாக்காலி ஆடுமாடுகளின் சொந்தக்காரர்கள் தமது கால்நடைகளை வீட்டில் பாதுகாப்பாக வைக்கும்படி பொலிசார் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சமீபத்தில் கரையூர்ப் பொலிஸ் அதிகாரிகளான திரு எஸ். பி ரத்னாயக்கா, திரு. எஸ். மஜீத் ஆகியோர் யாழ்ப்பாணம் டேவிற்ரோட் வளவில் மாடு பங்கு போட்டுக் கொண்டிருந்த ஒரு கோஷ்டியில் திரு ஏ. தேவராசா என்பவரை ஸ்தலத்திலேயே கைதுசெய்து யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

ஏ. தவராசா என்பவரைக் குற்றவாளியாகக் கண்ட யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் எதிரிக்கு 35 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

திட்டியில் களவாடப்பட்ட மாட்டை வெட்டிப் பங்கு போட்டதாக கரையூர்ப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட பிள்ளையார், ஐயர், செபமாலை ஆகிய மூவரையும் குற்றவாளிகளாகக் கண்ட யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் ஒவ்வொருவருக்கும் தலா 50ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். [வி. நி.]

---

ப நோ கூ ச

### புதிய கட்டடம்

தருமபுரம், திங்கள்

கல்வெட்டித்திடல் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் தருமபுரம் கிளை டிப்போவுக்கு நீண்டகாலமாக கட்டிடமில்லாதிருந்தது ஒரு பெரும் குறையாயிருந்துவந்தது. தற்பொழுது நில அபிவிருத்தி இலாகாவின் உதவியுடன், கட்டடம் நிறுவப்பட்டு சம்பிரதாய முறைப்படி குடிபுகும் வைபவம் இம்மாதம் 20-ந் திகதி நடைபெற்றது.

மூவாயிரம் கூப்பன்கள் உள்ள இக் கிளையில் வருங்காலத்தில் சுறு சுறுப்பான முறையில் வியாபாரம் நடைபெறுமெனவும், கூட்டுறவுப் பகுதிப் பிரமுகர்களும் அரசாங்க அதிபர் உட்படப் பல உயர்தர அரசாங்க அதிகாரிகளும் சம்பிரதாயபூர்வமான திறப்பு விழா வைபவத்தில் கலந்துகொள்வார்களெனவும் சங்கத்தின் நியமன பரிபாலனத் தலைவர் திரு. சி. பி. தியாகராசா கூறினார்.

---

### 5 பிள்ளைகளின் தந்தை தற்கொலை

சங்கானை, திங்கள்

ஐந்துபிள்ளைகளின் தந்தையாரும் சிங்கப்பூர் பென்சனியருமாகிய சிறுவிளானைச் சேர்ந்த சின்னத்தம்பி கதிரவேலு [வயது 60] நச்சுத்திராவகம்அருந்தி மரணமானார்.

கடந்த மூன்று வருடகாலமாகச் சுகவீனமுற்றிருந்த கதிரவேலு பலவிதமான வைத்தியசிகிச்சை பெற்றும் குணப்படாத காரணத்தால்மனமுடைந்து தனது வீட்டுப் பின்புற வளவில்நச்சுத்திராவகம் அருந்தி அபாயகரமான நிலையில் இருக்கக்கண்டு உடனடியாக மூளாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டும் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போனதெனவும் முன்னொருமுறை தற்கொலை செய்ய எத்தனித்தபோது காப்பாற்றப்பட்டார் எனவும் சங்கானை பொலிஸ் கான்ஸ்டபிள் சிமியோன் நடத்திய விசாரணையில் தெரிய வந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

---

### மானுக்கு வைத்த துப்பாக்கி வேட்டு

### இளைஞர் இலக்கானாராம்

யாழ்ப்பாணம், செவ்

மான் வேட்டைக்குச் சென்றவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு 26 வயது வாலிபர் ஒருவர் இலக்கானாராம். இச் சம்பவம் கிளிநொச்சியிலுள்ள காடொன்றில் நடைபெற்றதாகத் தகவல் கிடைத்துள்ளது.

நேற்று நள்ளிரவு இத் துப்பாக்கிச் சூட்டுக்கு படுகாயமுற்ற இராசரத்தினம் என்ற வாலிபர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வேட்டைக்குச் சென்ற நால்வர் காட்டினுள் மானுக்கு வைத்த குறிக்கு இராசரத்தினம் என்ற இந்த இளைஞர் இலக்கானாராம். பொலிசார் நடத்திய விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரிய வந்தது.

இதுசம்பந்தமாக காரொன்றையும் நால்வரையும் கிளிநொச்சிப் பொலிசார் தேடி வருகின்றனர் [கா. நி]

---

### சிங்களவகுப்புகள் ஆரம்பம்

சங்கானை, திங்கள்

வலி-மேற்குக் காரியாதிகாரி கந்தோரில் சிங்கள வகுப்பு ஆரம்பமாகியுள்ளது. இப்பகுதியில் கடமையாற்றும் கிராமசேவகர்களுக்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள சிங்கள வகுப்பு வாரத்தில் மூன்று நாட்களுக்கு நடாத்தப்படுகிறது.

வருடா வருடம் சம்பள உயர்வை நிறுத்திவைக்கும் அரசினரின் கட்டளைக்கு அஞ்சிய கிராமசேவகர்கள் தற்பொழுது சிங்களம் கற்க முன்வந்துள்ளனராம்.

---


### யாழ். பஸ் நிலையத்தில் கைது

சங்கானை, திங்கள்

கடந்த சில மாதங்களுக்கு முன் வடலியடைப்பைச் சேர்ந்த திரு. எஸ். செல்லப்பா என்பவர் வீட்டில் தச்சுவேலைக்கென வந்திருக்கையில் அந்த வீட்டினுள் இருந்த பணப்பெட்டியை உடைத்து 500 ரூபாய் களவாடிச் சென்றவரெனச் சந்தேகிக்கப்பட்ட மகாலிங்கம் தவலிங்கம் என்பவரை யாழ் பஸ் நிலையத்தில் வைத்து பொலிசார் கைது செய்துள்ளனர்.

சங்கானைப் பொலிசாரின் விசாரணையில் தவலிங்கம் இதற்கு முன்பும் பலதடவை சிறைசென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. இந்நபர் றிமாண்டில் வைக்கப்பட்டு விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

---


# டிஸ்பிரின்

கரையக்கூடிய டிஸ்பிரின், வலி, காய்ச்சல், தடிமல், டெங்குச் சுரம், பல் வலி, தசை நார் வலிகள் நோவுகளிலிருந்து வன்மையான துரித நிவாரணம் தருவதென்று பெரிதும் ஏற்கப்படுவது.

டிஸ்பிரினின் கூட்டுப் பொருள்கள், டெங்குச் சுரம், காய்ச்சற் குணம் ஆகியவற்றால் உடம்பின் சந்துகளில் ஏற்படும் நோவுகளை அகற்ற உதவுகின்றன.

டிஸ்பிரின் கரையக்கூடியது; அது கரையக்கூடியதாகையால் இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிகிறது; விரைவாகச் செறிவதால், டிஸ்பிரின் துரிதமான வன்மையான நிவாரணம் தருகிறது.

டிஸ்பிரின் முற்றிலும் கரைவதாகையால். வன்மையும் பாதுகாப்பும் ஒருங்கே வாய்ந்தது. அது, வேறு விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கரையாத துகள்கள் எவையும் உங்கள் வயிற்றில் தங்க விடுவதில்லை.

விரிவாகப் பாவித்தும் பரீட்சித்தும் ஒப்பிட்டும் பார்த்த பின், உலகெங்குமுள்ள டாக்டர்களால் பரந்தளவில் தேர்ந்தெடுக்கப்படுவதால், டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம்.

டிஸ்பிரின் அலுமீனிய உறையில் சுற்றிச் சீலிடப்பட்டிருப்பதால் நன்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

கரையக்கூடிய டிஸ்பிரின் – வன்மையான பாதுகாப்பான துரித நிவாரணத்துக்கென விசேஷமாக உருவாக்கப்பட்டது.

டிஸ்பிரினைக் கரைத்துப் பருகுங்கள்; அல்லது மாத்திரையாக விழுங்குங்கள்

றெக்கிட் அன்ட் கொலமன் தயாரிப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென். மேரிஸ் கோஷ்டி வெற்றி

## சனசமூக நிலையங்களுக்கிடையே நடக்கும் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ். விளையாட்டமைச்சின் ஆதரவில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யாழ்ப்பாண காரியாதிகாரி பிரிவுக்குட்பட்ட சனசமூகநிலையங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாவாந்துறை சென். மேரீஸ் சனசமூக நிலையத்திற்கும் மனோன்மணி சனசமூகநிலையத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சென் மேரீஸ் கோஷ்டி 2—0 கோல்களால் மனோன்மணி சனசமூகநிலையத்தை வெற்றியீட்டியது.

ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் அருமையான பாசிங் ஆட்டத்தை இரு பகுதியினரும் ஆடி ஒரு ரசிப்பான போட்டியை ரசிகர்களுக்கு அளித்தனர். இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் இரு பகுதியினரும் பெரும் பலப்பரீட்சையில் இறங்கினர்.

சென். மேரிஸ் கோஷ்டியினர் துரிதமாகமுன்னேறிக்கொண்டேயிருந்தனர். மனோன்மணி சனசமூகநிலைய வீரர்கள் பல கோல்போடும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியபோதும் அவற்றைப் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

இப் போட்டிக்கு திரு. இலங்கைநாயகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### நிக்லஸ் வெற்றி

இப்போட்டியை அடுத்து நடைபெற்ற சென். நிக்லஸ் சனசமூகநிலையத்திற்கும் கோண்டாவில் சரஸ்வதி சனசமூகநிலையத்திற்கும் இடையே நடைபெற்ற மோதலில் சென் நிக்கிலஸ் கோஷ்டி 2—1 கோல்களால் சரஸ்வதி சனசமூகநிலையத்தை வெற்றியீட்டியது.

### வாகிஸ்வரி வெற்றி

வண். வடக்கு நீராவியடி சனசமூகநிலையத்திற்கும் இடையே ஸ்ரீ வாகிஸ்வரி சனசமூகநிலையத்திற்கும் இடையே நடைபெற்ற மற்றொரு உதைந்தாட்டப் போட்டியில் ஸ்ரீவாகிஸ்வரி சனசமூகநிலையம் 2-1 கோல்களால் நீராவியடி சனசமூகநிலையக் கோஷ்டியை வெற்றியீட்டியது.

இப் போட்டிக்கு திரு. கோபால் மத்திஸ்தராகக் கடமையாற்றினார். [வி. நி]

## லண்டன் பயணமானார்

சுழிபுரம், திங்கள்

சித்தங்கேணியைச் சேர்ந்த திரு. அ. சிவபாதசுந்தரம் லண்டன் பயணமானார். இவர் பரீஸ்டராவதற்காகவே லண்டன் சென்றுள்ளார். சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரிப் பழைய மாணவரான இவர் விளையாட்டுத்துறையில் முன்னணியில் விளங்கியவர்.

## தலைமையாசிரியா இடமாற்றம்

குரும்பசிட்டி. திங்கள்

வவனியா சம்மாங்குளம் அரசினர் தமிழ் பாடசாலை தலைமையாசிரியர் திரு. மு. க சுப்பிரமணியம் இம்மாதம் 19 திகதி முதல் குரும்பசிட்டி தமிழ் கலவன் பாடசாலைக்கு தலைமையாசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 23-1-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

**344 மீற்றர் & 61 மீற்றர்**

6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 இதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு 7-30 குரல்வகை, 8-00 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.


**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 சங்கீதபாராயணம், 6-30 விளையாட்டுலைச்சற்றி, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவேகச்சக்கரம் - 55, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச் சுருள், 9-45 நாதசுரம் — எஸ். நடராசா.



50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்


50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்





அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர்
உங்கள் தேசிய லொத்தர் சுவீப்
டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

1968 பெப்ருவரி 15-ந் திகதி 181-வது சீட்டிழுப்பு பலாங்கொடையில் நடைபெறும்.


1-வது பரிசு ரூ. 100, 000/- அல்லது புத்தம்புதியபேஜோ 404 ஸ்டேசன் வகனும் ரூ. 77,050/- ரொக்கமும் ★



2-வது பரிசு ரூ. 40,000/- அல்லது புத்தம்புதிய பேஜோ404 காரும் ரூ. 20,500/- ரொக்கமும் ★



3-வது பரிசு ரூ. 10,000/- அல்லது புத்தம்புதிய மகோமிக் இன்டர்நாஷனல் டி-275 ட்ராக்டர் (மெஸர்ஸ்) சிலோன் சேர்விஸஸ் சப்ளைஸ் கம்பனி லிமிட்டெட்டின் உபகரணையுடன்) விசேஷமாகக் குறைக்கப்பட்ட விலையான ரூ. 10,000/-க்கு வழங்கப்படுகிறது.



★ இவைகள் தீர்வை உட்பட வழமையான கம்பெனி பட்டியல் விலைக்குக் குறைந்ததாகும்.

100 ஆறுதல் பரிசுகள்:

கடந்த இரண்டு கார் சீட்டிழுப்புகளில் 100 அதிர்ஷ்டப்பரிசு பெற்றவர்கள் தலா ரூ. 1250/- பரிசு பெற்றார்கள்.

இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பு முகாம்களினால் கடத்தல் கட்டுக்கடங்கிவிட்டதாம்

## பொதுமக்களுக்கு தொல்லை இல்லாமல் நடக்க உத்தரவு

### வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் சுந்தரலிங்கம் அறிக்கை

— நமது நிருபர் எம். எஸ். துரைராசா —

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சில இடங்களில் தற்சமயம் பொலிசார் நிறுவியுள்ள தடுப்புமுகாம்களினால் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த கள்ளக்கடத்தல் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதாகவும், இங்கிருந்து உப உணவுப் பொருட்கள், பால் உணவுப்பொருட்கள் முதலியவை வெளியூர்களுக்கு கடத்தப்பட்டுவந்தது. 99 சதவீதம் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதாகவும் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்புமுகாம்களினால் சாதாரண பிரயாணிகளும், போக்குவரத்து வாகனங்களும் தொல்லைகளுக்குள்ளாகாதவண்ணம் கடமைகளைப்புரிம்படி சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

'ஈழநாடு'க்கென வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் விடுத்த விசேஷ அறிக்கையொன்றில் இந்த விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வடபகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் பொலிஸ் தடுப்புமுகாம்களினால் சாதாரண பாதசாரிகளும், பிரயாண வண்டிகளும் பாதிக்கப்படுவதாக சிலர் அபிப்பிராயம் தெரிவிப்பது தவறாகும், நாட்டின் பொருளாதாரத்தையும், வியாபாரப் பொருள்கள் பொதுமக்களுக்குக் கிடைப்பதையும் இது பாதிக்கக்கூடியது.

### காரணம் இதுதான்

சமீபகாலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து பொதுமக்களின் பாவனைக்குரிய பொருள்கள் பெருமளவில் வெளியிடங்களுக்குக் கடத்தப்பட்டுவந்த காரணத்தினாலும், உள்ளூர் உற்பத்திகளைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு வெளிநாட்டுப்பொருட்கள் இங்கு பெருமளவில் கடத்தப்பட்டுவந்த காரணத்தினாலுமே பொலிசார் இந்தத் தடுப்புமுகாம்களை முக்கியமான இடங்களில் அமைக்கவேண்டியநிலை ஏற்பட்டது. இதனால் பெருமளவில் கள்ளக்கடத்தலைக் கட்டுப்படுத்தி வெற்றியும் கண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது ஏற்பட்டுள்ளபால் மாவுத் தட்டுப்பாடு, உப உணவுத் தட்டுப்பாடு, மணிக்கடைப் பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றுக்கு முக்கிய காரணம் இங்கிருந்து மேற்குறிப்பிட்ட பொருட்கள் கடத்தல் செய்யப்படுவதே யாகும்.

### கடத்தல் நடந்தன

யாழ்ப்பாணத்திலிருந்து பால்மாவுப் பொருட்களான ஹோர்லிக்ஸ், ஓவல்றின் ஆகியனவும், மணிக்கடைப் பொருட்களான போர்ச்லேட், நைலோன் வலைகள், நைலோன் நூல்கள் ஆகியனவும். மீன் எண்ணெய்க் குளிகைகள், வெளிநாட்டு விலையுயர்ந்த மருந்துக் குளிகைகள் ஆகியனவும் சமீபகாலங்களில் பெருந்தொகையாக வெளியிடங்களுக்குக் கடத்தல் செய்யப்பட்டுவந்தன

### உள்ளூர் உற்பத்தி பாதிப்பு

மேலும் வெளிநாட்டிலிருந்து விலையுயர்ந்த மணிப்புரி, காஞ்சிபுரம்பட்டு, திருமண வைபவங்களுக்குரிய விலையுயர்ந்த கூறைச்சேலைகள் ஆகியன கடத்தல் செய்யப்பட்டு இங்கு பெருமளவில் அதிக விலைக்கு கள்ள மார்க்கெட்டில் விற்பனையாகிக்கொண்டிருப்பதாயும் பொலிசாருக்கு நம்பத் தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளன. இக்கடத்தல் காரணமாக யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்படும் கைத்தறி நெசவு துணிகள் விற்பனவு பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் முக்கிய இடங்களாகியவல்வெட்டித்துறை, தொண்டமனாறு, கொடிகாமம், பருத்தித்துறை, வரணி ஆகிய இடங்களில்இப்பொழுது பொலிஸ் தடுப்பு முகாம்கள் போடப்பட்டுள்ளன. இந்தத் தடுப்பு முகாம்கள் தற்காலிகமாகவே இடப்பட்டுள்ளன. இத்தடுப்பு முகாம்கள் மேலும் கொஞ்சக் காலம் இருக்குமேயானால், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளுக்கும் கள்ளக்கடத்தல் என்பதற்கும் சம்பந்தமே இல்லாத நிலைமை ஏற்பட்டுவிடும்

### காணாமல்போன கம்பி கண்டுபிடிப்பு

அளவெட்டி, திங்கள்

ஆறுமாதத்துக்கு முன் காணாமல்போன மின்சார இணைப்புக் கம்பியை காங்கேசந்துறைப் பொலிசார் கண்டுபிடித்தனர்.

மின்சார இலாகாவுக்குச் சொந்தமானதும் கட்டுவன் ஆஸ்பத்திரியிலிருந்து ஆறு மாதங்களுக்குமுன் காணாமற் போனதுமான மின்சார இணைப்புக் கம்பியை, காங்கேசன்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து குரும்பசிட்டியில் கண்டுபிடித்தனர்.

இதுசம்பந்தமாக பொலிஸார் சிலரைக் கைதுசெய்து பிணையில் விட்டுள்ளனர்.

பொலிசாரின் புலன்விசாரணை தொடர்கிறது

### இளைஞர் முன்னேற இதுவேவழி

உடுவில், திங்கள்

இந்த நாட்டில் வேலையில்லாப் பிரச்னை அதிகரிக்கவும் வேலையற்றவர்கள் எண்ணிக்கைகூடிக் கொண்டு வரவும் முக்கிய காரணம் இளைஞர்களிடையே காணப்படும்உத்தியோக மோகம் தான். அரசாங்கஉத்தியோகத்தை நம்பி இன்று எத்தனையோ வாலிபர்கள் தமது பெற்றோர்கள் செய்துவந்த தொழில்களைகைவிட்டு, வழி தெரியாமல் திண்டாடுகிறார்கள். இவ்வாலிபர்கள் முன்னேற வேண்டுமானால் இளைஞர் முன்னேற்றக் கழகங்களை கிராமந்தோறும் ஏற்படுத்த வாலிபர்களை விவசாயம், கைத்தொழில், தொழில் நுட்பப் பயிற்சி வேலைகளில் ஈடுபடுத்த ஊக்குவிக்கவேண்டும். ''இளைஞர்கள் முன்னேறவும் இதுவே வழியாக இருக்கும்''

கொக்குவிலில் ''இளைஞர் முன்னேற்கழகம்'' ஒன்றை நேற்று மாலை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்டப்பாடசாலை போதனாசிரியர் திரு. சி. இராமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்

கழகத்தின் உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. சு. மகேந்திரன், உபதலைவர் திரு. எஸ். வைகுந்தநாதன், செயலாளர் திரு. ந. சிவராசா, உபசெயலாளர் திரு.க. பத்மநாதன், தனாதிகாரி திரு. நா. விஜயநாதன், கணக்குப் பரிசோதகர் திரு. பி. கமலநாதன்.

மேலும்நான்குபேர் அடங்கிய நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### விரைவில் நிவாரணம்

மன்னார், திங்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கத்துடன் மன்னார் தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. ஜே எக்ஸ். ஜோகிம் தற்பொழுது வேண்டிய [illegible] இன்னும் மதிப்பீடு முடித்து [illegible] வில் வழங்கப் படுமெனத் தெரிய வருகிறது.

## 'தெய்வ நெறிதான் சமூகத்தைசீர்திருத்தும்'

### தெய்வப்பாவை விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், செவ்.

''இன்றைய உலகத்தில் சமூகத்தைச் சீர்திருத்துவதற்கென நாடகங்கள் பல வற்றை மேடையெற்றி வருகிறார்கள். ஆனால் சமூகங்கள் சீர்திருந்துவதாகக் காணோம். உண்மையில்சமூகத்தைச் சீர்திருத்துவது தெய்வநெறி ஒன்றேயாகும்''

இவ்வாறு ஞாயிறு மாலை யாழ் நகரமண்டபத்தில் நடைபெற்ற தெய்வப் பாவை நாடகவிழாவின் போது திரு சொக்கன் எழுதிய தெய்வப்பாவையென்னும் நாடகநூலை வெளியிட்டுவைத்த சைவப்பெரியார் திரு. எம். வைரமுத்து தெரிவித்தார். அவர்மேலும் குறிப்பிட்டவை வருமாறு:

சைவசமயம் ஆதியும் அந்தமும் அற்றது. வாழையடி வாழையாகச் சான்றோர்களால் புரக்கப்பட்டுவருவது காலத்துக்குக்காலம் ஏற்பட்ட கடுஞ்சோதனைகளையெல்லாம் வெற்றி கண்டு தனது புனித நிலையோடு இன்றும் நிலைபெற்றுள்ளது

பெரியபுராணத்திலே விளங்கும் மங்கையர்க்கரசியாரை அடியொற்றி ஆக்கப்பட்டது இந்நாடகம் ஒரு காலத்தில் நூல்கள்பாட்டுகளினால்மட்டுமே ஆக்கப்பட்டு வந்தன. பின்னர் வசனத்தினால் அவைகள் ஆக்கப்பட்டு வந்தன. அவற்றின் மூலம் சமயங்களை வளர்க்க முடிந்தது.

தெய்வப்பாவை போன்ற சமய உண்மையை நிலை நாட்டக்கூடிய நாடகங்களை எதிர்காலத்திலே படைத்து மேடையேற்றி மக்களிடையே சமய அறிவை விருத்தி செய்தல்வேண்டும்.

''தெய்வப் பாவை''யென்னும் நாடகநூல் முதற்பிரதியை பெற்றுக்கொண்ட முதலியார் சி. முத்துத்தம்பி பேசுகையில், மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் என்று சேக்கிழார் சுவாமிகள் தனிப்பண்புடன் குறிப்பிடும் மங்கையர்க்கரசியாரினாலே தான் பாண்டிய நாட்டில் மீண்டும் சைவம்மறுமலர்ச்சியடைந்தது என்றார்.

[நி]

### வாலிப.........

1ம் பக்கத் தொடர்ச்சி

விடும் என்று வாலிப முன்னணியைச் சேர்ந்த முக்கிய செயற்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்

இதுபற்றி தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடத்தின் முக்கிய பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவிக்கையில் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியினர் கட்சியிலிருந்து விலகினால் அதனைத் தாம்மறுக்கப் போவதில்லையெனவும், புதிய வாலிப முன்னணியொன்றை அமைக்க கட்சி சித்தமாக உள்ளதென்றும் இதன் முடிவு அண்மையில் கட்சியிலிருந்து வெளியேறிய விடுதலை இயக்கத்தினருக்கு நேர்ந்தது போலவே இருக்குமென்றும் தெரிவித்தார்.

அடுத்தமாதம் 18-ம்திகதி நடைபெறவிருக்கும் கல்முனை இடைத்தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் ஜனாப் மசூர் மௌலானாவை ஆதரித்து

### 'மாவட்டசபை...

[1-ம் பக்க தொடர்ச்சி]

னணியின் காரியதரிசி திரு. தி. மகேந்திரராசா மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திரு த சங்கரப்பிள்ளை தலைமையில் பல முக்கிய தமிழ் காங்கிரஸ் பிரமுகர்களும, யாழ். தமிழ்காங்கிரஸ் வாலிப முன்னணியில அங்கத்தவர்களும் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் மாவட்ட சபைமசோதா பற்றி காரசாரமான விவாதம் நடைபெற்றது. திரு.மகேந்திரராசா மேலும் குறிப்பிட்டதாவது: மாவட்டசபைகளினால் தமிழ் மக்களுக்கு எந்தவகையிலும் நன்மை ஏற்படாதென்றும் தென்னிலங்கையில் வாழும் தமிழ்மக்கள் அங்கு இம் மசோதாவினால் நசுக்கப்படுவார்கள் என்று எமது தலைவரே குறிப்பிட்டு பிரசாரக்கூட்டங்களின் விளக்கங்கள் கொடுத்துள்ளார். இம் மசோதா வந்தால் தமிழ்மக்களின் கல்விஉரிமையும்குடிஉரிமையும் படிப்படியாக பறிக்கப் பட்டுவிடும்.

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் 'யாழ் நங்கை' என்று அழைக்கப்படும் உருவச்சிலையை எடுத்து அதற்குப் பதிலாக சரஸ்வதி சிலையை நிறுவுவதாகக் கொடுத்த வாக்குறுதியை தமிழ்காங்கிரஸ் காப்பாற்ற வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. [வி. நி]

### யாருடையது?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் 'மோர்க்கண்டையில்' வங்கிக்கு முன்பாக கீபேர்ஸ் ஒன்று திறப்புகளுடன் திரு எம். முகைதீன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

### தண்ணீர் கஷ்டம்

குரும்பசிட்டி, திங்கள்

பாலாலி அரசினர் ஆசிரிய கலாசாலையில்பயிற்சி பெறுவோர் தண்ணீர் வசதிக் குறைவால் கஷ்டமுறுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. ஆசிரியபயிற்சிக் கலாசாலையின் தண்ணீர் தொட்டிபல வருடங்களுக்கு முன்னரே இடிந்து விழுந்து விட்டதாம் தற்போது அருகாமையில் உள்ள விமான நிலையத்திலிருந்தே தண்ணீர் பெறப்படுகின்றது. இதுவும் ஒரு குறிக்கப்பட்ட நேரத்திற்கே வழங்கப்படுகிறது. இதனால் மாணவர்கள் விடுதிகளில் குளிப்பதற்கு மிகவும் கஷ்டமுறுகின்றனர்.

பிரசாரக் கூட்டங்கள் நடாத்த தமிழரசு வாலிப முன்னணியைச் சேர்ந்த கோஷ்டியொன்று அங்கு செல்வது பற்றி வாலிப முன்னணி இன்னமும் தீர்மானிக்கவில்லையென்றும் இது பற்றிய முடிவுகளும் திருமலை சுதந்திரதின விழா பகிஷ்கரிப்பு பற்றிய முடிவுகளும் 28-ம் திகதிக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது.

[கா. நி]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org